திணைக்கள சுற்றறிக்கை:- 02 | 140 | 2014

எனது இல: TA/03/PHLT/02/2014
சுகாதார அமைச்சு, (சுவசிறிபாய"
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2014.09.22.

அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் /
தாபனத் தலைவர்கள்.

**துணை மருத்துவ சேவையின் பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சிப் பாடசாலைக்கு பதில் கடமை அல்லது கடமையைச் செய்யும் அடிப்படையில் போதனாசிரியர்கள் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்.**

சுகாதார அமைச்சில் துணைமருத்துவ சேவையின் பொது சுகாதார ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் பயிற்சிப் பாடசாலைக்கு பதில் கடமை அல்லது கடமையைச் செய்ய சேர்த்துக் கொள்வதற்காக அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலை / தாபனங்களில் கடமையாற்றுகின்ற பொது சுகாதார ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர் பதவியிலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் தயாரித்து தாபனத் தலைவரினூடாக 2014.10.20 ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம்) 02 சுகாதார அமைச்சு, "சுவசிறிபாய", 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.

02. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:-

I. உரிய பதவியில் தரம் I. இலுள்ள உத்தியோகத்தர் அல்லது தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும்.

II. கற்பித்தலில் திறமை மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி இருத்தல் வேண்டும்.

III. வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

03. சம்பளமும் கொடுப்பனவுகளும்:-

அரச சேவை ஆணைக்குழுவின் விதிமுறையில் 1 ஆம் பகுதியில் IX அத்தியாயத்தில் 119 பிரிவின் பிரகாரம் பதிற்கடமை / கடமையைச் செய்வதற்கான கொடுப்பனவிற்கு உரித்துடையவராவார்.

04. ஆட்சேர்க்கும் முறை:-

தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் அடிப்படையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் பிரகாரம் நேர்முகப் பரீட்சையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படும்.

05. புள்ளிகள் வழங்கும் முறை:-

1. சேவை அனுபவம்

| | | |
|---|---|---|
| தரம் II இல் ஒரு வருடத்திற்கு புள்ளிகள் 02 அடிப்படையில் | - | (12 புள்ளிகள்) |
| தரம் I இல் ஒரு வருடத்திற்கு புள்ளிகள் 03 அடிப்படையில் | - | (30 புள்ளிகள்) |
| | - | (42 புள்ளிகள்) |

2. கற்பித்தலில் அனுபவம்

ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் - (10 புள்ளிகள்)

(குறைந்தது 06 மாதங்கள் இருப்பின் 01 புள்ளி) - (10 புள்ளிகள்)

3. உயர் கல்வித் தகைமைகள்

I. பதவிக்குத் தொடர்புடைய தறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் - (18 புள்ளிகள்)

II. பதவியுடன் தொடர்புடைய துறையில் இரண்டாம் தர கீழ் பிரிவு பட்டம் - (10 புள்ளிகள்)

பதவியுடன் தொடர்புடைய துறையில் இரண்டாம் தர உயர் பிரிவு பட்டம் - (12புள்ளிகள்)

பதவியுடன் தொடர்புடைய துறையில் முதற்தர பட்டம் - (15 புள்ளிகள்)

III. தேவையான அடிப்படைத் தகைமைகளுடன் பதவியுடன் தொடர்புடைய டிப்ளோமா / பட்டம் - (10 புள்ளிகள்)

(கூடிய தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்) - 18 புள்ளிகள்)

4. விஷேட முதன்மை

குறித்த துறையில பிரசுரங்கள், புத்தகங்கள், அறிவுறுத்தல்கள்,மற்றும் வழிகாட்டி என்பன பிரசுரிக்கப்பட்டிருந்தால் கவனித்து

ஒரு முதன்மைக்கு 02 புள்ளிகள் - (10 புள்ளிகள்)

5. ஆங்கில மொழித் திறமை:

க.பொ.த (சா.த) பரீட்சை திறமைச் சித்தி -(08 புள்ளிகள்)

க.பொ.த (சா.த) பரீட்சை விஷேட சித்தி -(10 புள்ளிகள்)

ஆங்கில மொழியில் முதல் பட்டம் / பட்டப் பின்படிப்பு /

பட்டப் பின்படிப்பு டிப்ளோமா – 15 புள்ளிகள்)

(புள்ளிகள் (கூடிய தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்) - (15 புள்ளிகள்)

6. நேர்முகப் பரீட்சையின் போது - (05 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 100)

06. I. தகைமைகளை உறுதிப்படுத்த ஏதாவது சான்றிதழ்கள், ஆவணங்கள் இருப்பின் அவற்றின் நிழற்பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

II. விண்ணப்பதாரியினால் சான்றிதழ்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்க முடியாதவிடத்து கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

III. விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டாக்டர்.பி.ஜி.பஹிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.